மகளிர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

**முன்னிலை : – திருமதி. D.சண்முகப்பிரியா, பி.எல்.,**

அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம்,

திருச்சிராப்பள்ளி .

2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 09 ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.216/2022**

**(CNR NO: TNTP030503932022)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் விபரம் | : | தமிழ்நாடு அரசு<br>மண்ணச்சநல்லூர் காவல் நிலைய<br>ஆய்வாளர் மூலம்<br>குற்ற எண்.485/2021, திருச்சிராப்பள்ளி . |
| எதிரிகளின் பெயர் விலாசம் | : | 1. சதீஷ்குமார் ...... **இறந்துவிட்டார்**<br>2. திலகம்(எ) மணி,<br>த/பெ ஜெகதீசன்,<br>சுனைப்புகநல்லூர்,<br>மண்ணச்சநல்லூர் தாலுக்கா,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>3. குணசேகரன் த/பெ காசிலிங்கம்,<br>அழகியமணவாளம்,<br>மண்ணச்சநல்லூர் தாலுக்கா,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளகுற்றச்சாட்டு | : | 1 , 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(பி), 307, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் படியும், 3வது எதிரிமீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 307 உ/இ 149 ன் கீழ். |
| எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள்<br>**<u>முதல் குற்றச்சாட்டு</u>**<br>**<u>1,3 எதிரிகள் மீது</u>**<br>**இதச பிரிவு 148 ன்** கீழ் | : | இவ்வழக்கின் புகார்தாரர் லோகேஷ் என்பவர் காவ்யா என்பவருடன் எதார்த்தமாக பேசியதை பார்த்த காவியாவின் உறவினரான |

இளம்பிழையாளி–1 புகார்தாரரை கண்டித்ததால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்துள்ளது. கடந்த 19.09.2021 அன்று இரவு 7.45 மணியளவில் புகார்தாரரும் அவரது தாயார் சித்ராவும் அழகியமணவாளம் கைக்காட்டி அருகில் நின்றிருந்தபோது, எதிரிகள் மூவரும் வழக்கின் இளம்பிழையாளிகள் இருவரும் கலகம் செய்யவேண்டும் என்ற பொது நோக்கத்தோடு TN 48 S 4034 என்ற பதிவு எண் கொண்ட TVS XL மற்றும் TN 48 AL 2836 என்ற பதிவு எண் கொண்ட TVS Scooty ஆகிய இரு சக்கர வாகனங்களில் வந்து இறங்கி, 1வது எதிரி கையில் அருவாளுடனும், 3வது எதிரி கையில் இரும்பு பைப்புடனும் சட்டவிரோத கும்பலாக அபாயகரமான ஆயுதங்களுடன் ஒன்று கூடியதாக குற்றச்சாட்டு

**<u>இரண்டாவது குற்றச்சாட்டு</u>**
**2வது எதிரி மீது**
**இதச பிரிவு 147ன் கீழ்**

அதே சம்பவத்தின்போது அதே நாள், அதே நேரம், அதே இடத்தில் மேற்படி சட்டவிரோத கும்பலில் 2வது எதிரி ஆயுதமின்றி இருந்ததாக குற்றச்சாட்டு

**<u>மூன்றாவது குற்றச்சாட்டு</u>**
**1 முதல் 3 எதிரிகள் மீது**

அதே நாள், நேரம், இடத்தில் 1 முதல் 3 எதிரிகள் இளம் பிழையாளிகளுடன்

**இதச பிரிவு 294(பி)ன் கீழ்**

சேர்ந்துகொண்டு புகார்தாரரை பார்த்து தேவடியா புண்டை மவனே காவ்யாகிட்ட ஏண்டா அடிக்கடி பேசற என்று சொல்லி காமக்குரோத வார்த்தைகளால் திட்டியதாக குற்றச்சாட்டு

**<u>நான்காவது குற்றச்சாட்டு</u>**
**1,3 எதிரிகள் மீது**
**இதச பிரிவு 323 ன் கீழ்**

அதே சம்பவத்தின்போது புகார்தாரருக்கும், 1,3 எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அப்போது 1,3 எதிரிகள் புகார்தாரரை முதுகில் கையால் அடித்ததாக குற்றச்சாட்டு.

**<u>ஐந்தாவது குற்றச்சாட்டு</u>**
**1,3 எதிரிகள் மீது**
**இதச பிரிவு 307 ன் கீழ்**

அதே சம்பவத்தின்போது, 1,3 எதிரிகள் புகார்தாரரை முதுகில் கையால் அடித்தபோது அதைப்பார்த்த புகார்தாரரின் தாயார் சித்ரா தடுத்ததாகவும், சித்ராவை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு, 3 வது எதிரி, இத்தோடு செத்து ஒழிந்துபோடி என்று சொல்லி தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப் கம்பியால் சித்ராவின் வலதுபக்க தலை, வலது கண்புருவத்தில் மேல்பகுதி ஆகிய இடங்களில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது தடுக்கவந்த புகார்தாரரைப் பார்த்து 1 வது எதிரி, இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி, தன் கையில் வைத்திருந்த அருவாளால் ஓங்கி தலையில் வெட்டி மரண காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாக குற்றச்சாட்டு

| | | |
|---|---|---|
| <u>**ஆறாவது குற்றச்சாட்டு**</u><br>**1,3 எதிரிகள்மீது**<br>**இதச பிரிவு 506(2)ன் கீழ்** | | அதே சம்பவத்தின்போது, 1, 3 எதிரிகள் இருவரும் சேர்ந்துகொண்டு, தன் கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி எங்ககிட்ட வச்சுக்கிட்ட குடும்பத்தோடு கொன்றுவிடுவோம் என்று சொல்லி உயிர்பயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்ததாக குற்றச்சாட்டு. |
| **குற்றம் சாட்டப்பட்டவரின் வாதம்** | : | குற்றவாளி இல்லை |
| **தீர்மானம்** | : | 2,3 எதிரிகளை குற்றவாளிகள் இல்லையென்று நீதிமன்றம் தீர்மானித்தது |
| **தீர்ப்பு** | : | முடிவில், 2 வது எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 3 வது எதிரிமீதான இதச பிரிவுகள் 148, 294(பி), 323, 307, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப் –பிக்கவில்லை என்று முடிவு செய்து, 2,3 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து 2,3 எதிரிகளை கு.விமு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 வது எதிரி, வழக்கு நிலுவையில் |

இருந்தபோது இறந்துவிட்ட காரணத்தினால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டது.

| | | |
|---|---|---|
| வழக்குச்சொத்து குறித்த உத்தரவு | : | இவ்வழக்கின் இளம்பிழையாளிகள் மீதான வழக்கு திருச்சிராப்பள்ளி, இளஞ்சிறார் நீதிக்குழுமத்தில் நிலுவையில் இருந்து வருவதால், இவ்வழக்குச் சொத்தான ஆர்.பி.நெ.06/2026 ல் கண்டுள்ள அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஐயும் திருச்சிராப்பள்ளி, இளஞ்சிறார் நீதிக்குழுமத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கவும். மற்றும் இவ்வழக்குச் சொத்துக் –களான, அ.சா.ஆ.13 புகைப்படத்தில் உள்ள TVS XL என்ற இருசக்கர வாகனம் மற்றும் அ.சா.ஆ.14 புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் Scooty குறித்த உத்தரவினை திருச்சிராப்பள்ளி, இளஞ்சிறார் நீதிக்குழுமம் பிறப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |
| அரசுதரப்பு வழக்கறிஞர் | : | செல்வி.எ. சுமதி, அவர்கள் |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | 2 வது எதிரிக்காக திரு.மதியழகன் அவர்கள்<br>3 வது எதிரிக்காக திரு. தாணு அவர்கள் |

**வழக்கின் சுருக்கம் :–**

| | | |
|---|---|---|
| காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண், | : | மண்ணச்சநல்லூர் காவல்நிலையம், குற்ற எண்.485/2021. |

| | |
|---|---|
| 1 வது எதிரியின் பெயர் | **சதீஷ்குமார்….இறந்துவிட்டார்** |
| தந்தையின் பெயர் | பிச்சைமுத்து |
| இருப்பிட முகவரி | திருவரங்கப்பட்டி<br>மண்ணச்சநல்லூர்<br>திருச்சிராப்பள்ளி |
| 2 வது எதிரியின் பெயர் | திலகம்(எ) மணி |
| தந்தையின் பெயர் | ஜெகதீசன் |
| இருப்பிட முகவரி | சுனைப்புகநல்லூர்,<br>மண்ணச்சநல்லூர் தாலுக்கா,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 3 வது எதிரியின் பெயர் | குணசேகரன் |
| தந்தையின் பெயர் | த/பெ காசிலிங்கம் |
| இருப்பிட முகவரி | அழகியமணவாளம்,<br>மண்ணச்சநல்லூர் தாலுக்கா,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| குற்ற நிகழ்வு நாள் | 19.09.2021 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | 20.09.2021 |
| முதல் தகவல் அறிக்கை நாள் | 20.09.2021 |
| 2,3 எதிரிகள் காவலில் வைக்கப்பட்ட நாள் | 20.09.2021 |
| 2,3 எதிரிகள் பிணையில் சென்ற நாள் | 23.10.2021 |
| வழக்கு கமிட்டல் செய்யப்பட்ட : நாள் | 27.10.2022 |
| எதிரிகள் மீது பிரிவு 228 Cr.P.C ன் : | 24.05.2023 |

| | | |
|---|---|---|
| கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | | |
| 2,3 எதிரிகள்மீது பிரிவு 313(1)(b) Cr.P.C.,ன் கீழ் சாட்சிகளின் விசாரணை குறித்து விசாரிக்கப்பட்ட நாள் | : | 30.06.2026 |
| விசாரணை ஆரம்ப நாள் | : | 21.04.2026 |
| விசாரணை முடிவு நாள் | : | 02..7.2026 |
| தீர்ப்புரை நாள் | : | 09.07.2026 |
| பல்வகை குற்றவியல் மனுவின் விபரங்கள் | : | 1) 1வது எதிரி பிணைக்கேட்டு கு.வி.மு.ச.பிரிவு 439ன் கீழ் திருச்சி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Crl.M..P.No.4654/2021, 25.10.2021 அன்று அனுமதிக்கப்பட்டது.<br>2. 2, 3 எதிரிகள் பிணைக்கேட்டு, கு.வி.மு.ச.பிரிவு 439ன் கீழ் திருச்சி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Crl.M..P.No.4483/2021, 21.10.2021 அன்று அனுமதிக்கப்பட்டது.<br>3. மனுதாரர்/வழக்குச்சொத்தின் உரிமையாளர் வழக்குச்சொத்தை இடைக்கால பராமரிப்பில் திரும்ப பெறக்கோரி கு.வி.மு.ச.பிரிவு 457 & 451 ன் கீழ் திருச்சி, கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Crl.M.P.No/10013/2021–ன் கீழான மனு |

அனுமதிக்கப்பட்டது.

**<u>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நாட்கள்</u>**

| வரிசை எண். | சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|
| 1. | லோகேஷ் | 21.04.2025 | -- |
| 2. | தனலெட்சுமி | 21.04.2025 | -- |
| 3 | சித்ரா | 28.04.2026 | ---- |
| 4 | விஜய் | 28.04.2026 | --- |
| 5 | பாலமுருகன் | 28.04.2026 | --- |
| 6 | மருத்துவர் அமுதவள்ளி | 29.04.2026 | 29.04.2026 |
| 7 | சங்கர் | 11.05.2026 | 11.05.2026 |
| 8 | ரமேஷ்குமார் | 23.06.2026 | 23.06.2026 |

இவ்வழக்கு என் முன்பு 02.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து, அரசுக்காக சிறப்பு அரசு வழக்கறிஞர் செல்வி.எ.சுமதி, அவர்கள் முன்னிலையாகியும், 2 வது எதிரிக்காக வழக்கறிஞர் திரு.மதியழகன் அவர்கள் முன்னிலையாகியும், 3 வது எதிரிக்காக வழக்கறிஞர் திரு. தாணு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்னர், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

திருச்சிராப்பள்ளி, மண்ணச்சநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.

ரமேஷ்குமார் அவர்கள் இவ்வழக்கின் 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(பி), 307, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் படியும், 3வது எதிரிமீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 307 உ/இ 149ன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. இறுதி அறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு :-</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் லோகேஷ் என்பவர் அதே ஊரைச்சேர்ந்த காவியாவுடன் எதார்த்தமாக பேசியதை பார்த்த காவியாவின் உறவினரான இளம்பிழையாளி-1 புகார்தாரரை கண்டித்ததால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக கடந்த 19.09.2021 அன்று இரவு 7.45 மணியளவில் புகார்தாரரும் அவரது தாயார் சித்ராவும் அழகியமணவாளம் கைக்காட்டி அருகில் நின்றிருந்தபோது, 1 முதல் 3 எதிரிகள் மற்றும் வழக்கின் இளம்பிழையாளிகளும் கலகம் செய்யவேண்டும் என்ற பொது நோக்கத்தோடு TN 48 S 4034 என்ற பதிவு எண் கொண்ட TVS XL மற்றும் TN 48 AL 2836 என்ற பதிவு எண் கொண்ட TVS Scooty ஆகிய இரு சக்கர வாகனங்களில் வந்து இறங்கி, 1வது எதிரி கையில் அருவாளுடனும், 3 வது எதிரி கையில் இரும்பு பைப்புடனும் சட்டவிரோத கும்பலாக அபாயகரமான ஆயுதங்களுடன் ஒன்றுகூடியும், அந்த சட்டவிரோத கும்பலில் 2வது எதிரி ஆயுதமின்றி நின்றிருந்துள்ளார். 1 முதல் 3 எதிரிகள் இளம்பிழையாளிகளுடன் சேர்ந்துகொண்டு புகார்தாரரை பார்த்து தேவடியா புண்டை மவனே காவ்யாகிட்ட

ஏண்டா அடிக்கடி பேசற என்றுசொல்லி காமக்குரோத வார்த்தைகளால் திட்டியுள்ளார். 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரை முதுகில் கையால் அடித்துள்ளார். அதைப்பார்த்த புகார்தாரரின் தாயார் சித்ரா தடுத்தபோது சித்ராவை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு, 3வது எதிரி, இத்தோடு செத்து ஒழிந்துபோடி என்று சொல்லி தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப் கம்பியால் சித்ராவின் வலதுபக்க தலை, வலது கண்புருவத்தில் மேல்பகுதி ஆகிய இடங்களில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரைப் பார்த்து 1வது எதிரி, இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி, தன் கையில் வைத்திருந்த அருவாளால் ஓங்கி தலையில் வெட்டி மரண காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்துள்ளார். 1,3 எதிரிகள் இருவரும் கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி எங்ககிட்ட வச்சுக்கிட்ட குடும்பத்தோடு கொன்றுவிடுவோம் என்று சொல்லி உயிர்பயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்துள்ளனர். 1 மற்றும் 2 வது எதிரிகள் இதச பிரிவுகள் 148, 294(பி), 307, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் படியும், 3வது எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 307 உ/இ 149ன் படியும், தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக திருச்சிராப்பள்ளி, மண்ணச்சநல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கானது முதலில் திருச்சிராப்பள்ளி, கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.119/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு வழக்காவணங்களின்

நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. அதன் பின்னர் இவ்வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 209(A)ன் கீழ் மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.216/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

4. அதன்பின்னர் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர் எதிரிகள்மீது குற்றச்சாட்டு வனைய போதுமான அடிப்படை ஆதாரம் இருப்பது தெரிய வந்ததால், 1வது எதிரிமீது இதச பிரிவுகள் 148, 294(பி), 323, 307, 506(2)ன் படியும், 2 வது எதிரிமீது இதச பிரிவுகள் 147, 294(பி)ன் படியும், 3 வது எதிரிமீது இதச பிரிவுகள் 148, 294(பி), 323, 307, 506(2)ன் படியும், குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு தமிழில் விளக்கிகூறி வினவியபோது 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென்று கூறி குற்றச்சாட்டை மறுத்தார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், 1வது எதிரி இறந்துவிட்டதாக அரசுதரப்பில் இறப்புச்சான்று 09.09.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதால். 1வது எதிரிமீதான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டது.

**5.** 2,3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க வேண்டி

அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுதரப்பில் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

**6(1).** அ.சா.1 லோகேஷ் கைகாட்டியில் உள்ள பிள்ளையார் கோவிலில் 2021ல் இரவு 7–8 மணியளவில் முன்பின் தெரியாத நபருடன் பேசிக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத மூன்று பேர்கள் தாக்கியதால் மயக்கமாகியுள்ளார். அ.சா1ன் அம்மா மூவரையும் தடுத்துள்ளார். இரும்பு பைப்பால் அ.சா.1ஐ அடித்ததில் உச்சந்தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. அ.சா.1ன் அம்மாவின் இடது புருவத்தில் பைப்பில் அடித்ததால் காயம் ஏற்பட்டுள்ளது. குமரேசன் ஆட்டோவில் அ.சா,1 ஐயும் அவரது அம்மாவையும் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கும், பிறகு திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றுள்ளார்கள். அ.சா.1 அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

**6(2).** அ.சா.2 தனலெட்சுமி, அ.சா.1 லோகேஷ் அடிப்பட்டு பிள்ளையார் கோவில் அருகே கிடந்ததாகவும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார். அ.சா.3 சித்ரா, அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து தனக்கும் அ.சா.1ற்கும் காயம் எற்பட்டது குறித்தும், எதிரிகள் யார் என்று தெரியாது என்றும் கூறியுள்ளார். அ.சா.4 விஜய், அ.சா.1 லோகேஷிக்கு அடிபட்டு இருந்ததால்

ஆம்புலன்சில் அனுப்பி வைத்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள அ.சா.ஆ.2 இரண்டாவது சாட்சி கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறியுள்ளார்.

**6(3).** அ.சா.5 பாலமுருகன், லோகேஷ் கீழே விழுந்துக்கிடந்ததால், அவரை ஆம்புலன்சில் அனுப்பியுள்ளார். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.ஆ.3 முதலாவது சாட்சி கையொப்பம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்.

**6(4).** அ.சா.6. டாக்டர்.அமுதவள்ளி, 19.09.2021 அன்று மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 8.20 மற்றும் 08.25 மணியளவில் சித்ரா, அ.சா.1 லோகேஷ் (அ.சா.2) சிகிச்சைக்காக வந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார். சித்ராவின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.4, விபத்து பதிவேட்டிற்கு பின்புறம் உள்ள காயச்சான்று அ.சா.ஆ.5, லோகேஷின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 மற்றும் விபத்து பதிவேட்டிற்கு பின்புறம் உள்ள காயச்சான்று அ.சா.ஆ.7 வழங்கியுள்ளார்.

**6(5).** அ.சா.7 சங்கர், 20.09.2021 அன்று அ.சா.1 னிடமிருந்து புகார் வாக்குமூலத்தினைப் பெற்று, நிலைய குற்ற எண்.485/2021, U/s. 147, 148, 294(b), 323, 307, 506(ii) IPC r/w 4 TNPHW Act ன்படி அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்துள்ளார்.

**6(6).** அ.சா.8 ஆய்வாளர் ரமேஷ்குமார், இவ்வழக்கை 20.09.2021 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள்

முத்துசெல்வம் மற்றும் விஜய் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.9 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகள் லோகேஷ் மற்றும் சித்ரா ஆகியோர்களை விசாரணை செய்துள்ளார். 14.00 மணிக்கு திருவரங்கம்பட்டி சுடுகாடு அருகே மறைந்திருந்த எதிரிகளை காரணம் கூறி கைது செய்தும் 14.30 மணிக்கு சாட்சிகள் பாலமுருகன், பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் இறந்துபோன 1வது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். 15.30 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த சம்பவத்தன்று பயன்படுத்திய TN 48 S 4034 என்ற பதிவு எண் கொண்ட TVS XL வண்டி, TN 48 AN 2836 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டி ஒன்று, சுமார் 2 1/2 அடி நீளம் கொண்ட கம்பி ஒன்று(அ.சா.பொ.1), சுமார் 40 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஒன்றினை (அ.சா.பொ.2) அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பாலமுருகன், பத்மநாபன், முருகேசன், தனலெட்சுமி, தீன், சிதம்பரம் ஆகியோரை விசாரணை செய்துள்ளார். 5.11.2021 ம் தேதி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அ.சா.ஆ.12 படிவம்-91ன் கீழ் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RP No. 55/2021 பெற்றுள்ளார். TN 48 S 4034 என்ற பதிவு எண் கொண்ட TVS XL வண்டிக்குரிய புகைப்படம் அ.சா.ஆ.13. TN 48 AN 2836 என்ற பதிவு எண் கொண்ட ஸ்கூட்டிக்குரிய புகைப்படம் அ.சா.ஆ.14 ஆகும். 14.03.2022 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட லோகேஷ் மற்றும் சித்ரா ஆகியோர்களுக்கு காயச்சான்று பெற்றும், மண்ணச்நல்லூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அமுதவள்ளி மற்றும்

திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் தினேஷ், உதவி ஆய்வாளர் சங்கர் ஆகியோரை விசாரணை செய்துள்ளார். லோகேஷை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 25.08.2022 ம் தேதி காயச்சான்றளித்த மருத்துவரை அணுகி இறுதி கருத்துரைப் பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவினை U/s. 147, 148,294(b), 323, 307, 506(ii) IPC r/w 4 of TNPHW Act ல் இருந்து U/s. 147, 148, 149, 294(b), 323, 307, 506(ii) IPC r/w 4 of TNPHW Act ஆக சட்டபிரிவுகளை மாற்றம் செய்து அ.சா.ஆ.15 சட்டப்பிரிவு மாற்று அறிக்கையுடன் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் வாயிலாக 2,3 எதிரிகளுக்குப் பாதகமாக தென்பட்ட அம்சங்கள் குறித்து 2,3 எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது 2, 3 எதிரிகள் அவைகளைப் பொய் வழக்கு, பொய்சாட்சி என்று கூறினார்கள். 2, 3 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார்கள். ஆகையால் 2, 3 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லையென்று முடிக்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இவ்வழக்கில் 2 வது எதிரிமீது இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 3 வது எதிரிமீது இதச பிரிவுகள் 148, 294(பி) 323, 307, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுக்களும் அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**9. பிரச்சினையும் தீர்வும்** :-

அரசுதரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர். அ.சா.1 முதல் அ.சா.8

வரையிலானவர்களின் சாட்சியத்தில் இருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ,.15 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ன் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10.** 2, 3 எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர்கள், இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 பிறழ் சாட்சியாகியுள்ளதாகவும், அ.சா.4 பார்வை மகசர் சாட்சி மட்டுமே என்றும், மேலும் அ.சா.8 வழக்கினை சரிவரப் புலன் விசாரணை செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.3 பிறழ் சாட்சியாகியுள்ள நிலையில், அரசு தரப்பில் 2, 3 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கவில்லை என்றும், எனவே 2, 3 எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

. **11.** கடந்த 19.9.2021 அன்று மண்ணச்சநல்லூர் மருத்துவமனைக்கு இரவு 8.25 மணிக்கு அ.சா.3 சித்ரா சிகிச்சைக்காக வந்துள்ளார் என்பதும், அவர் தன்னை 15 நபர்கள் கத்தியாலும், பிளாஸ்டிக் பைப்பாலும் இரவு 8.20 மணி அளவில் தாக்கியதாக கூறியுள்ளார் என்பதும், அவரது வலது நெற்றியில் 3x2x1 cm அளவிலான கிழிந்த காயம் மற்றும் வலது புருவத்தில் 2x2x1 cm அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டுள்ளது என்பதும், அவரை மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்பதும், அ.சா.6 மருத்துவர் அமுதவள்ளியின் சாட்சியத்தில் இருந்தும் அ.சா.ஆ,.4 விபத்து பதிவேட்டில் இருந்தும் தெரிய வருகிறது.

12. அதேபோல் அ.சா.1 லோகேஷ் 19.9.2021 அன்று இரவு 8.20 மணிக்கு மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டுள்ளார் என்பதும், அவரை அடையாளம் தெரிந்த 15 நபர்கள் அடையாளம் தெரியாத ஆயுதத்தால் தாக்கியதாக கூறியுள்ளார் என்பதும், அவருக்கு நடுதலையில் 7x5x3cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டுள்ளது என்பதும், அவரையும் திருச்சி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பது அ.சா.6 சாட்சி மருத்துவரின் சாட்சியத்தில் இருந்தும், அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் இருந்தும் தெரிய வருகிறது. மேலும் அ.சா.3 க்கு மற்றும் அ.சா.1 னுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் சொற்ப காயங்கள் என்பது அ.சா.6 ன் சாட்சியத்தில் இருந்தும் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.7 காயச்சான்றுகளில் இருந்தும் தெரிய வருகிறது. அ.சா.6 ன் சாட்சியத்தில் இருந்தும், அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.6 விபத்து பதிவேடுகளில் இருந்தும், 19.9.2021 அன்று அ.சா.3 மற்றும் அ.சா.1 தாங்கள் பதினைந்து நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி காயங்களுடன் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்துள்ளனர் என்பதும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் சொற்ப காயங்கள் என்பதும் தெரிய வருகிறது. மேற்படி காயங்கள் எதிரிகளால் தான் ஏற்பட்டதா, அரசு தரப்பில் கூறியுள்ளது போல் எதிரிகள் சட்டத்திற்கு புறம்பாக ஒன்று கூடி அ.சா.1 மற்றும் அ.சா.3 யை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அருவாள் மற்றும் பைப்பால் தாக்கி அவர்களுக்கு காயத்தை ஏற்படுத்தினார்களா என்று தற்சமயம் தீர்மானிக்க வேண்டியது உள்ளது.

13. அ.சா.1 இவ்வழக்கில் காயம் பட்ட நபர் லோகேஷ் தனது சாட்சியத்தில்

கைகாட்டியில் உள்ள பிள்ளையார் கோவிலில் 2021 இரவு 7, 8 மணி அளவில் முன்பின் தெரியாத நபர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது கைகலப்பாகி அவரை 3 பேர்கள் தாக்கி விட்டதாகவும், அவர்கள் யார் என்று தனக்கு அடையாளம் தெரியாது என்றும் அவரை அடித்த போது அவரது அம்மா வந்து தடுத்ததாகவும், அவரை முதலில் இரும்பு பைபால் அடித்ததாகவும், அதனால் அவருக்கு உச்சந்தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும், அவரது அம்மாவின் இடது புருவத்தில் பைப்பில் அடித்ததால் காயம் ஏற்பட்டது என்றும், அவரையும், அவரது அம்மாவையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, ஆஜர் 2,3 எதிரிகளை யார் என்று தனக்குத் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து சாட்சியம் அளித்ததால், அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, அ.சா.1 முன்னுக்குப்பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் ஆயுதங்களை அடையாளம் காண்பித்தோ, எதிரிகளை அடையாளம் காண்பித்தோ சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 றின் சாட்சியம் நம்பும்படியும், ஏற்கும்படியும், 2,3 எதிரிகள் தான், குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்பதை மெய்ப்பிக்கும் வகையிலும் அமையவில்லை.

**14.** இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றொரு நபரான அ.சா.3 சித்ரா தனது சாட்சியத்தில், எதிரிகளை தனக்கு யார் என்று தெரியாது என்றும், 2,3 வருடங்களுக்கு முன்பாக தன் மகன் லோகேஷ் கைகாட்டி அருகே சென்றபோது சண்டை என்று கூறியதால் தான் சென்றதாகவும், யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும்,

தனது வலது புருவத்தின் மேல் பைப்பால் தன்னை அடித்து விட்டதாகவும், தன் மகனுக்கு உச்சந்தலையில் அடிபட்டது என்றும், தன் மகனையும் யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும், இருட்டில் முகமூடி அணிந்திருந்ததாகவும் கூறியுள்ளார். அ.சா.3 அரசுதரப்பு வழக்கில் இருந்து முற்றிலும் பிறழ்ந்து சாட்சியம் அளித்ததால், அவரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும், யார் தங்களை தாக்கினார்கள் என்று தெரியாது என்றும், யார் தங்களை திட்டினார்கள் என்பது தெரியாது என்றும், தனக்கு முகம் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 றின் சாட்சியமும், 2,3 எதிரிகள் தான் குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அமையவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.3, எதிரிகள் தங்களை ஆபாசமாக பேசியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, இத்துடன் செத்து ஒழிந்து போ என்று திட்டி தாக்கியதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.3 ன் சாட்சியம் அரசுதரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் அமையவில்லை.

**15.** சம்பவத்தை நேரடியாக பார்த்த கண்ணுற்ற சாட்சி என்று அ.சா.2 தனலட்சுமி விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், 2 வருடங்களுக்கு முன்பாக லோகேஷ் அடிபட்டு பிள்ளையார் கோவில் அருகே சென்றதாகவும், சத்தம் கேட்டு தான் ஓடிச்சென்று பார்த்தபோது, லோகேஷினை அடித்தவர்கள் ஓடி விட்டார்கள் என்றும், அந்த சம்பவத்தில் வேறு யாருக்கும் அடிபடவில்லை என்றும், எதிரிகளை தனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கின்படி அந்த சம்பவத்தில் அ.சா.3 ற்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக

கூறப்பட்டுள்ளது. ஆனால் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 தனலட்சுமி, அ.சா.3 க்கு சம்பவத்தின்போது காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதை தான் பார்க்கவில்லை என்றுதான் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ன் சாட்சியம் 2, 3 எதிரிகள் தான் இந்த குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அமையவில்லை.

**16.** அ.சா.4 விஜய் தனது சாட்சியத்தில், கைகாட்டி அருகே வந்தபோது, லோகேஷுக்கு அடிபட்டு இருந்ததால் ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்ததாகவும், பார்வை மகசரில் உள்ள அ.சா.ஆ.2 கையொப்பத்தினை ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டதற்காக செய்து கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்காக, தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக கூறவில்லை. அ.சா.4 கினை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக பதில்கள் எதுவும் பெறப்படவில்லை. ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்பது அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்படடவில்லை.

**17.** அ.சா.5 பாலமுருகன் தனது சாட்சியத்தில், 4,5 வருடங்களுக்கு முன்பாக லோகேஷ் கீழே விழுந்து கிடந்ததாகவும், அவரை ஆம்புலன்ஸில் ஏற்றி விட்டதாகவும், போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் அன்றைய தினமே தன்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5, கைப்பற்றுதல் மகசரில் உள்ள

முதலாவது சாட்சி கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ளபோதிலும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 ம், எதிரிகளை போலீசார் கைது செய்ததாகவோ, 1வது எதிரி தன் முன்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ, போலீசார் தங்கள் முன்னிலையில் இருசக்கர வாகனங்கள் மற்றும் இரும்பு பைப், அருவாளை கைப்பற்றியதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.5 ன் சாட்சியமும் அரசுதரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் அமையவில்லை.

**18.** அ.சா.7 சங்கர் உதவி ஆய்வாளர், அ.சா.1 னிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அதனை ஒத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.7 புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது ஏற்புடையதாகவே அமைந்துள்ளது.

**19.** அ.சா.8 ஆய்வாளர் ரமேஷ்குமார் தான் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி. அவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சாட்சிகளை விசாரணை செய்ததாகவும், எதிரிகளை கைது செய்து, இளம்சிறார்களை கையகப்படுத்தியும், 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அவர்கள் எடுத்த ஆஜர்படுத்திய அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆயுதங்களையும், இருசக்கர வாகனங்களையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்ததாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.3 னிற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து, விபத்து பதிவேடுகள் பெற்றும், சாட்சிகள் அனைவரையும் விசாரணை செய்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8 அவர் மேற்கொண்ட புலன்விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தினை மறுத்துள்ளதும், கைப்பற்றுதல் மகசரிலும், வெள்ளை பேப்பரில் தான் கையொப்பம் பெற்று சென்றதாக கூறியுள்ளதும், அ.சா.4 ஆம்புலன்ஸில் ஏற்றுவிட்டதற்காகத்தான் தாங்கள் கையொப்பம் செய்ததாக கூறியுள்ளதும், அரசு தரப்பு வழக்கிற்கு எதிராகவே அமைந்துள்ளது. அ.சா.8 ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு அவர்களது சாட்சியங்கள் அமைந்துள்ளன. மேலும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுதங்களுக்கும், அ.சா.8 கைப்பற்றியுள்ள ஆயுதங்களுக்கும் முரண்பாடு உள்ளது. அ.சா.8, அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஐ மருத்துவரிடம் காண்பித்து மேற்கண்ட ஆயுதங்களால் அ.சா.1 மற்றும் அ.சா.3 க்கு ஏற்பட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்பது குறித்து விசாரணை செய்யாததும், அரசுதரப்பு வழக்கினை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. அ.சா.8 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மட்டுமே. இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளான காயம்பட்ட நபர்களான அ.சா.1ம் மற்றும் அ.சா.3 பிறழ் சாட்சியாகியுள்ள நிலையில், அ.சா.8 ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது

என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அரசு தரப்பில் கூறியுள்ளது போல் சட்டத்திற்கு புறம்பாக ஆயுதங்களுடன் ஒன்று கூடி, ஆபாசமாக பேசி, கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களைத் தாக்கி, அவர்களுக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பதை அரசு தரப்பில் மெய்ப்பிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**20.** முடிவில், 2வது எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 147, 294(பி)ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 3வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 294(பி), 323, 307, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கவில்லை என்று முடிவு செய்து, 2, 3 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 2, 3 எதிரிகளை கு.விமு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1வது எதிரி, வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட காரணத்தினால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டது.

**21.** இவ்வழக்கின் இளம்பிழையாளிகள் மீதான வழக்கு திருச்சிராப்பள்ளி, இளஞ்சிறார் நீதிக்குழுமத்தில் நிலுவையில் இருந்து வருவதால், இவ்வழக்குச் சொத்தான ஆர்.பி.நெ.06/2026ல் கண்டுள்ள அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஐயும் திருச்சிராப்பள்ளி, இளஞ்சிறார் நீதிக்குழுமத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கவும். மற்றும் இவ்வழக்குச் சொத்துக் –களான, அ.சா.ஆ.13 புகைப்படத்தில் உள்ள TVS XL என்ற இருசக்கர வாகனம் மற்றும் அ.சா.ஆ.14

புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் Scooty குறித்த உத்தரவினை திருச்சிராப்பள்ளி, இளஞ்சிறார் நீதிக்குழுமம் பிறப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமூலம் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 09 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

D SHANMUGA PRIYA Digitally signed by D SHANMUGA PRIYA

அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்,
திருச்சிராப்பள்ளி.

**இணைப்பு**

**அரசுதரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | லோகேஷ்– புகார்தாரர் |
| 2 | அ.சா.2 | தனலெட்சுமி– நேரில் பார்த்த சாட்சி |
| 3 | அ.சா.3 | சித்ரா– பாதிக்கப்பட்ட சிறுமி |
| 4 | அ.சா.4 | விஜய்– பார்வை மகசர் சாட்சி |
| 5 | அ.சா.5 | பாலமுருகன்– ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 6 | அ.சா.6 | மருத்துவர் அமுதவள்ளி– நிபுணர் சாட்சி |
| 7 | அ.சா.7 | சங்கர்– மற்ற சாட்சி |
| 8 | அ.சா.8 | ரமேஷ்குமார்– புலன்விசாரணை அதிகாரி |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | விபத்து பதிவேடு ( சித்ரா) | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | சித்ராவின் காயச்சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | லோகேஷின் விபத்து பதிவேடு | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | லோகேஷின் காயச்சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ.9 | பார்வை மகசர் | அ.சா.8 |
| அ.சா.ஆ.10 | மாதிரி வரைபடம் | அ.சா.8 |
| அ.சா.ஆ.11 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.8 |
| அ.சா.ஆ.12 | படிவம்–91 | அ.சா.8 |
| அ.சா.ஆ.13 | இருசக்கர வாகனம் TVS XL வாகனத்தின் போட்டோ | அ.சா.8 |
| அ.சா.ஆ.14 | இருசக்கர வாகனம் ஸ்கூட்டி வாகனத்தின் போட்டோ | அ.சா.8 |
| அ.சா.ஆ.15 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை | அ.சா.8 |

**<u>அரசுதரப்பு சான்றுப்பொருட்கள்</u>**

அ.சா.பொ.1 – கம்பி

அ.சா.பொ,2 – அருவாள்

**<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

D SHANMUGA PRIYA Digitally signed by D SHANMUGA PRIYA

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,

திருச்சிராப்பள்ளி